

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு, முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், நேற்று (14.7.2025) ரூபாய் 07.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார். உடன் சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி , மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் , சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் உட்பட பலர் உள்ளனர்.

### திருப்புவனம் வட்டம் – மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த

# அஜித்குமார் குடும்பத்திற்கு - ரூ 7.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி –
## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் வழங்கினார்!

**திருப்புவனம், ஜூலை 16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, கூட்டுற வுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் - சிவகங்கை மாவட்டம் - திருப்பு வனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு ரூபாய் 7.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார்.**

இதுதொடர்பான செய்திக் குறிப்பு வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த செல்வன் அஜித்குமார் என்பவரின் குடும்பத்தாரிடம் கடந்த 1.7.2025 அன்று அலைபேசியின் வாயிலாகத் தொடர்பு கொண்டு, தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அக்குடும்பத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், கடந்த 2.7.2025 அன்று கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை, மறைந்த அஜித்குமார் சகோதரரான நவீன்குமாருக்கு (வயது 27), சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட், (காரைக்குடி) டெக்னீசியன் பணியிடத்திற்கென வழங்கினார்.

அக்குடும்பத்தினரின் கோரிக்கைக்கிணங்க மதுரையிலுள்ள ஆவின் நிறுவனத்தில் பணி நியமன ஆணையினை மாற்றி வழங்கிடவும், முன்னதாக இக்குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டா தொடர்பாக, மாற்று இடம் வேண்டி விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாகவும், உரிய நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், அக்குடும்பத்தினருக்கு ரூபாய் 07.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினையும் நேற்றைய தினம் (14.7.2025) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் நேரில் சென்று வழங்கி ஆறுதல் கூறி, அக்குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், திருப்பு வனம் வட்டாட்சியர் (பொ) ரமேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.

### கழக சட்டத்துறை துணைச் செயலாளர் என்.மருதுகணேஷ் சிறியதந்தை

# கழக மூத்த முன்னோடி சி.சுபாஷ்சந்திரபோஸ் (எ) முரசொலி போஸ் மறைவு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

மதுரை, ஜூலை 16-

தி.மு.க. சட்டத்துறை துணைச் செயலாளர் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் அவர்களின் சிறியதந்தையும், கழக தோழர்கள் எஸ். கணேசன், எஸ்.ராஜா ஆகியோரின் தந்தையும், மதுரை பசுமலை கிளைக்கழகத்தின் முன்னாள் அவைத் தலைவரும், கழகத்தின் மூத்த முன்னோடியுமான சி.சுபாஷ் சந்திர போஸ் (எ) முரசொலி போஸ் ( வயது 82) அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக 13.07.2025 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம். .

தகவல் அறிந்து மதுரை மாநகர் மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான கோ.தளபதி மறைந்த சுபாஷ் சந்திர போஸ் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி இறுதி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வின் போது திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி செயலாளர் கே. கிருஷ்ண பாண்டியன், ஆனையூர் பகுதி துணைச் செயலாளர் எம்.சின்னான், மதுரை மாநகராட்சி கல்விக் குழுத் தலைவர் எம்.பி.ஆர். ரவிச்சந்திரன், 93 வது வட்டச் செயலாளர் எம்.ஜெயராமன், வெஸ்லி பாண்டியன் மற்றும், 93வது வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் பங்கேற்று மலரஞ்சலி செலுத்தி இறுதி மரியாதை செலுத்தினார்கள். அன்னாரின் இறுதி சடங்கு நேற்று முன்தினம் (14.07.2025 திங்கட்கிழமை) பசுமலை மயானத்தில் நடை பெற்றது.இதில் கழகத்தோழர்கள் பொதுமக்கள் பலரும் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர்

# திருச்சி சிவா எம்.பி.யின் மூத்த சகோதரியின் கணவர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 16-

கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி.யின் மூத்த சகோதரியின் கணவர் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்த செய்தி வருமாறு:-



**கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர், திருச்சி சிவா அவர்களின் மூத்த சகோதரி திருமதி சகுந்தலா அவர்களின் கணவரும், ஓய்வு பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரும், ஆசிரியர் மன்ற முன்னாள் செயலாளருமான ஆர்.பாலசுப்பிரமணியன் அவர்கள், நேற்று உடல்நலக் குறைவால், தமது 87வது வயதில் இயற்கை எய்தினார் என்ற தகவலறிந்து பெரிதும் வருந்துகிறேன்.**

**அன்னாரை இழந்து துயருறும் அவரது துணைவியார் திருமதி சகுந்தலா, அவ்விணையரின் பிள்ளைகளான மாலதி, ராஜ்காந்த் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், தமது சகோதரியின் கணவரை இழந்து ஆற்றொணாத் துயருறும் சகோதரர் திருச்சி சிவா அவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மறைந்த பாலசுப்பிரமணியன் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (15.7.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில் லால்குடி அருகில், அன்பில் கிராமத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு, இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி சத்திய பாமா திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடினார் அதனைத் தொடர்ந்து நலத்திட்ட உதவி இரு சக்கர வாகனம் வழங்கினார் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், உடன் தூத்துக்குடி மேயர் பெ.ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், கோவில்பட்டி நகராட்சி தலைவர் கா.கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராதாகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர் கு.தவமணி, கிழக்கு நகர கழகச் செயலாளர் சுரேஷ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன், நகர மாணவரணி மயில் கர்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.




நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அம்பாசமுத்திரம்,நாங்குநேரி, இராதாபுரம் சட்டமன்ற தொகுதி களுக்கான பாக முகவர்கள் கூட்டம் (BLA 2) செங்குளம் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், தொகுதி பார்வையாளர்கள் ஜோசப்ராஜ், சிவராஜ்,சுரேஷ்ராஜன்,முன்னாள் எம்.பி ஞானதிரவியம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளர்களாக

திரு. **இராபர்ட் (எ) இராஜதுரை**

484, லால்பகதூர் சாஸ்திரி தெரு, அத்திப்பட்டு, திருவள்ளூர் - 600 120

திரு. **இராஜேஷ் ஜெயின்**

29, கொண்டித்தோப்பு, அயலூர்முத்தையா தெரு, புரசைவாக்கம், சென்னை - 600 079.

திரு. **எஸ்.டி.ஆர். பொன்சீலன்**

100ஜே/29/2, மில்லர்புரம், தூத்துக்குடி 628 008. ஆகியோர் **தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளர்களாக** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து கழகப் பணியாற்றுவார்கள்.

``அண்ணா அறிவாலயம்''
சென்னை 600 018,
நாள் : 14-7- 2025.

**துரைமுருகன்,**
**பொதுச் செயலாளர்**
**தி.மு.க.**



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் முகாமான ”உங்களுடன் ஸ்டாலின்எனும் சிறப்பு திட்டத்தை நேற்று (15.07.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சியில் 1 வது மற்றும் 2 வது வார்டுக்குட்பட்ட மக்களுக்கு ஆளூர், மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். முகாமில் குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜி.பிரின்ஸ், மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை ஆணையர் பாலசுப்பிரமணியம், வேலாயுதம், மருத்துவர் ஆல்பர் மதியரசு, இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஏரலில் உடல்நிலை பாதிக்கப்பட்ட தி.மு.க. மூத்த பிரமுகர் சக்திவேலின் மருத்துவத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ.1 லட்சம் மற்றும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா சார்பில் ரூ.50 ஆயிரம் என மொத்தம் ரூ.1.50 லட்சத்தை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் வழங்கினார். தூத்துக்குடி மாவட்டம் ஏரலைச் சேர்ந்தவர் சக்திவேல் (83). மின்வாரியத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் தி.மு.க.பேச்சாளராகவும், ஏரல் நகர துணைச்செயலாளராகவும் உள்ளார். நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ். ஆர். எஸ்.உமரிசங்கர், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ராமஜெயம், முன்னாள் அமைப்பாளர் ஜெகன், ஸ்ரீவைகுண்டம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோட்டாளம், ஏரல் பேரூர் செயலாளர் ராயப்பன், ஏரல் அனைத்து வியா பாரிகள் சங்கச்செயலாளர் மணிவண்ணன், முன்னாள் நகரச் செயலாளர் பார்த்திபன், இளைஞர் அணி ஒன் றிய அமைப்பாளர் ராஜவேல், நகர பொருளாளர் ஆத்தாங்கரையான். ஒன்றிய துணைச் செயலாளர் சண்முகராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.